Eelakesari Educational Supplement

விலை சதம் 3

ஓம்

# ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

"கற்பவை கற்றுக் கற்றாங் கொழுக"

புத்தகம் 2 | சுன்னாகம்: வெகுதானிய ௵ ஐப்பசி ௴ உக ௳ (6-11-38) | இல. 4

## கல்வி முறை

நமது நாட்டின் கல்விமுறை அவசியம் திருத்தமடைய வேண்டியதொன்றாக விருக்கின்றது. வித்தியாபகுதியார் இவ்வுண்மையை நன்கறிந்தும் அதற்காக வேண்டிய முயற்சிகளைச் செய்யாது வாளாவிருக்கின்றனர். கல்விமுறை பூரணமாகத் திருத்தப்படவேண்டியிருக்க, அவர்கள் அங்கு மிங்கும் ஒரு சிறு திருத்தங்களைச் செய்து திருப்தியடைந்துகொண்டு வருகின்றனர். வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கம், வ. இ. ஆங்கில ஆசிரியர் சங்கம் முதலிய சங்கங்கள் எத்தனையோ முறை கல்விப்பகுதியாருக்குக் கல்வித் திருத்தங்களைப்பற்றிப் புகட்டியிருந்தும் பலன் ஒரு சிறிதுமில்லாமற் போயிற்று.

சமீபத்தில் வடபெரும்பகுதி வித்தியாதரிசி வித்தியாசாலைகளுக்கு அனுப்பிய சுற்று நிருபம் கல்வி முறையைப் பாதிப்பதொன்றாகையால், அது ஈண்டு ஆராயத்தக்கது. அச் சுற்று நிருபம், பகிரங்க பரீக்ஷை, வித்தியாவருடம், பரீக்ஷைமுறை ஆதியவற்றில் மாற்றங்களை உண்டுபண்ணுகின்றது. வித்தியாபகுதியார் ஐந்தாம் வகுப்பிற் பகிரங்கப் பரீக்ஷை வைப்பதாகத் தீர்மானித்துள்ளார்கள். ஐந்தாம் வகுப்பு பகிரங்கப் பரீக்ஷைக்கு ஏற்றதா? பத்துப் பதினொருவயசுப் பிள்ளைகளைப் பகிரங்க பரீக்ஷைக்கு ஆயத்தஞ் செய்ய ஏவுவது அவர்களது மனோதத்துவங்களுக்குக் கெடுதியை விளைக்கக்கூடிய தொன்றாகும். பதினன்கு பதினைந்து வயசுப் பிள்ளைகள் பகிரங்க பரீக்ஷைகளுக்குரியரேயன்றி, இளம் பிள்ளைகள் தகுதியுடையவராகார். பகிரங்கப் பரீக்ஷை 8-ம் வகுப்பில் வைப்பதே தகுதி. ஐந்திற் கையாள எடுத்துக்கொண்ட முறையை எட்டாம் வகுப்பிற் கையாளுதல் பெரு நலத்தை விளைக்கும்.

எல்லா வித்தியசாலைகளுக்கும் வித்தியாவருடம் ஒரே காலத்திற் றொடங்கி ஒரேகாலத்தில் முடிவடையவேண்டுமென்ற திருத்தம் நன்மையை விளைக்கக்கூடிய தொன்றாகும். ஆனால் வருடத் தொடக்கம் எப்போது, முடிவு எப்போது? என்பவற்றைக் கல்விப்பகுதியார் உபாத்தியாயர்களுடனும் முகாமைக்காரருடனும் ஊன்றி ஆலோசித்திருக்கவேண்டும். இலங்கையிலுள்ளவர்களுக்குத் தைமாசம் வசதியோ என்பதைப் பலபாகங்களிலுமுள்ள கல்வியாளர்கள் முடிவு செய்யவேண்டும். எம்மாதமாயினும் பின்வரும் விஷயங்கள் கவனிக்கப்படவேண்டும். வருட முடிவில் அதாவது சகல பகிரங்கப் பரீக்ஷைகளும் J. S. C. (தமிழ்) S. S. C. (தமிழ்) J. S. C. (ஆங்கிலம்) Matric, Inter arts, B. A.) நடாத்தப்படவேண்டும். வருடமுடிவில் நாட்கள் கூடிய விடுதலை விடக்கூடியதாயிருக்கவேண்டும். வருடமுடிவில் வரும் விடுதலை நாட்கள் முடியுமுன் மேற்கூறிய பரீக்ஷைகளின் முடிவுகள் வெளிவரவேண்டும். புதுவருடம் தொடங்கும்போது நிச்சயமாக ஒரு வகுப்பிலிருந்து படிப்பதற்கு மேற்கூறிய திருத்தம் அவசியமாகும். ஒரு மாச விடுதலையுள் விடைப் பத்திரங்கள் திருத்தி முடிப்பது கஷ்டம் என்று வித்தியா பகுதியார் கூறக்

(தொடர்ச்சி 29-ம் பக்கம் பார்க்க)

கதைப்பகுதி

# ஞானம்பாள்

[மயூரம் வேதநாயகம்பிள்ளை அவர்கள் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரச் சுருக்கம்]

(திரு. மா. பீதாம்பரன்)

Rights Reserved

(முற்றொடர்)

நாங்கள் காடுமேடுகளெல்லாம் சுற்றிப் பார்த்துக்கொண்டு சூரியாஸ்தமயன சமயத்தில் இந்த அம்மணி ஏறிக்கொண்டு வந்த வண்டியைக் கண்டு மறித்தோம். அப்போது நடந்த யுத்தத்தில் தாசில்தாரும் அவருடைய நேசனும் குண்டுகள் பட்டுக் கீழேவிழுந்து விட்டார்கள். இந்த மனோன்மணி மாறுவேஷம் தரித்திருந்த போதிலும், மேகத்துள் மறைந்திருக்கின்ற சந்திர சூரியர்களை அவைகளின் பிரபை காட்டி விடுவது போல, இந்த உத்தமியை அவளுடைய முகக்காந்தி காட்டிவிட்டது. மற்றச் சங்கதிகளெல்லாம் அப்போது கூடஇருந்த உங்களுடைய மனுஷருக்குத் தெரியுமானதால் நான் சொல்லவேண்டுவதில்லை" என்றான். இதைக்கேட்ட உடனே சம்பந்தமுதலியார் மறுபடியும் என்னைத் தழுவிக்கொண்டு சொல்லுகிறார். நீசெய்த உபகாரத்தை நான் ஒருகாலும் மறப்பேனா? என் புத்திரி காணமற்போன உடனே உன்மேலும் சந்தேகம் நினைத்தேன். பிற்பாடு பல காரணங்களால் அந்தச் சந்தேகம் நிவர்த்தியாகி விட்டது. என் மகளுக்கும் எங்களுக்கும் பிராண பிக்ஷைக் கொடுத்துக் காப்பாற்றினாய். உனக்குத் திரிலோகங்களையும் கொடுத்தாலும் நீ அங்கீகரிக்கும்படியான ஒரு சன்மானத்தை உனக்குச் செய்ய யோசித்திருக்கிறேன்." என்றார். அவரும் மற்றவர்களும் எனக்குச் செய்த ஸ்தோத்திரங்களை எல்லாம் ஞானம்பாளுடைய ஒரு மந்தஹாசத்துக்குச் சமானமாக நான் நினைக்கவில்லை. ஞானம்பாள் தப்பிவந்த சமாசாரம் என்னுடைய தாய் தந்தையர் கேள்விப்பட்டு, அவளைப் பார்க்கும்பொருட்டு மறுநாள் உதயநேரத்துக்குப் பனம்பள்ளிக்கிராமத்துக்கு வந்தார்கள். அவர்களைக் கண்ட உடனே, சம்பந்த முதலியார் சந்தோஷ சித்தராய்ச் சொல்லுகிறார்: "உங்களுடைய புத்திர சிரோமணியால் எங்களுடைய அருமைக் குமாரத்தியை நாங்கள் மறுபடியும் கண்டோம். அவளை இன்னும் இரண்டு நாள் வரைக்கும் காணாமலிருப்போமானால் எங்களுடைய உயிரைக் காண்மாட்டோம். நாங்கள் குடும்பத்துடன் மாண்டு போயிருப்போம். உங்கள் குமாரனே எங்களுக்குக் குடும்பப் பிரதிஷ்டை செய்வித்தான். ஞானம்பாளுடைய சரீரம் அவனால் ரக்ஷிக்கப்பட்டபடியால் அந்தச் சரீரத்தை அவனுக்கே தத்தம் செய்ய யோசித்திருக்கிறேன். இதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்," என்று கேட்டார். "உங்களுடைய இஷ்டப்படி நடக்கக் காத்திருக்கிறோம்" என்று என்னுடைய தாய் தந்தையர்கள் சொன்னார்கள். கலியாணத்தை இனித் தாமதப்படுத்தக் கூடாதென்றும், சீக்கிரத்தில் நிறைவேற்ற வேண்டும் என்றும், அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது வீட்டுக்கு வெளியில் யுத்தம் நடப்பதுபோல், பெரிய இரைச்சலும் சப்தமுங்கேட்டு, நாங்கள் உடனே வெளியே ஓடிப்பார்த்தோம். அநேக சிப்பாய்களும் சேவகர்களும் உருவின கத்தி முதலிய ஆயுதங்களுடனே வந்து எங்கள் வீட்டை வளைந்து கொண்டார்கள். அவர்களுடன் கூட ஒரு பெரிய குதிரையின்மேல் ஏறிக்கொண்டு வந்த சுதேசியான ஒரு உத்தியோகஸ்தர் அதிக கோபத்துடன் பிரதாப முதலி என்பவன் யார் என்று கேட்க, நான்தான் என்று அவருக்கு எதிரே போனேன். என்னைப் பிடித்துக் கட்டும்படி உத்தரவு கொடுத்தார். உடனே என் தகப்பனாரும் சம்பந்த முதலியாரும் ஓடிவந்து, "அந்தப் பிள்ளையைக் கட்டவேண்டிய காரணம் என்ன? அவன் என்ன குற்றம் செய்தான்?" என்று கேட்டார்கள். உடனே எங்கள் பந்துக்கள், வேலைக்காரர்கள், அந்தக் கிராமத்துக் குடிகள் முதலான இருநூறு ஜனங்கள் கூட்டங் கூடினதை அந்த உத்தியோகஸ்தர் கண்டு பயந்து என்னைக் கட்டவேண்டாமென்று உத்தரவு கொடுத்து, தெருத்திண்ணைமேல் உட்கார்ந்து கொண்டு, என்னைப்பார்த்து, "ஒருபெரிய உத்தியோகஸ்தனாகிய தாசில்தாரை நிஷ்காரணமாய் நீர் கொலை செய்து விட்டதால், அதைப்பற்றி விசாரிக்க வந்திருக்கிறோம். நீர் என்ன சொல்லுகிறீர்?" என்று கேட்டார். இதைக் கேட்டவுடனே எனக்குத் தைரியம் உண்டாகி, ஞானம்பாள் விஷயத்தில் அந்தத் தாசில்தார் செய்த அக்கிரமங்களை எல்லாம் ஆதியோடந்தமாகத் தெரிவித்தேன். உடனே அவர் "நீர் சொல்வதற்குச் சாக்ஷிகள் உண்டா?" என்று வினவினர். சாட்சிகள் இருக்கிறார்கள் என்றுசொல்லி, நான் பிடித்து வைத்திருந்த இரண்டு சேவ-

கர்களையும் அவர்முன்னே கொண்டுவந்து விட்டேன். அவர்கள் ஒரு காரியத்தையும் மறைக்காமல், சகல சங்கதிகளையும் விபரமாகச் சொல்லி வாக்குமூலம் எழுதி வைத்தார்கள். பிற்பாடு ஞானம்பாளைத் திரைமறைவில் இருக்கச்சொல்லி, அவளையும் அவளுடன் கூடவந்த ஆண்டிச்சி அம்மாளையும் விசாரித்தார். கடைசியாய் அவர் உண்மையைத் தெரிந்துகொண்டு, என்னை நோக்கிச் சொல்லுகிறார், "தாசில்தாரையும் அவருடைய நேசனையும் நீர் நிர்நிமித்தமாகக் கொலை செய்ததாக மட்டும் பிரஸ்தாபமே தவிரத் தாசில்தார் செய்த அக்கிரமங்களை ஒருவரும் தெரிவிக்கவில்லை. இப்போதுதான் உண்மை வெளியாயிற்று. தகுந்த அந்தஸ்துள்ள ஒரு கன்னிப் பெண்ணை அந்தத் தாசில்தார் பலவந்தமாகக் கொண்டுபோனதும், பிற்பாடு அந்தப்பெண் தப்பி ஓடும்பொழுது மறுபடியும் அவன் தொடர்ந்து, பலாத்காரம் செய்ய யத்தனப்பட்டதும், பெரிய அக்கிரமம். அந்தப் பெண்ணைத் தேடிக் கொண்டுபோன உம்மை அவனும் அவனுடைய நேசனும் கத்தி உருவி வெட்ட வந்தபடியால் உமது பிராணனை ரக்ஷித்துக் கொள்ளும் பொருட்டு, அந்தத் துஷ்டர்களைக் கொலை செய்யவேண்டியது அகத்தியமாயிருந்தது. ஆகையால் இந்த விஷயத்தில் உம்மிடத்தில் யாதொரு குற்றமுமில்லை. ஜனங்களுடைய க்ஷேமத்துக்காகத் தாசிலாக நியமிக்கப்பட்ட அந்தக் கொடியன் அவனுடைய அதிகாரத்தைத் துர் விஷயத்தில் உபயோகப் படுத்தினபடியால் அவன் ராஜ தண்டனைக்கும் தெய்வ தண்டனைக்கும் பாத்திரனாக இருக்கிறான். தெய்வ தண்டனை மூந்திக் கொண்டபடியால், இராஜ தண்டனைக்கு இடமில்லாமற் போயிற்று. ஆகையால் நீர் நிர்தோஷி என்று மேலான அதிகாரிகளுக்கு விஞ்ஞாபிக்கப்படும்," என்றார். இதைக் கேட்டவுடனே எங்களுக்கெல்லாம் தேகத்தை விட்டுப் பிரிந்துபோன உயிர் மறுபடியும் திரும்பி வந்ததுபோல் ஆனந்தம் உண்டாயிற்று. உடனே அந்தக் கனவான் விசாரணை விசாரணையான விவரங்களைக் கண்டு, ஒரு விஞ்ஞாபனப் பத்திரிகை எழுதி, அதைச் சில சேவகர் கையிலே கொடுத்துக் "கலெக்டர்" இடத்திற் கொடுக்கும்படி அனுப்பினார்.

(தொடரும்)

# பொது அறிவு

'ச. ழ.'

## அழுவதனால் ஆபத்து உண்டா?

கண் சிவக்க அழுவது நல்லதா கெட்டதா? அதனால் உடம்புக்கு நன்மையும் தீமையும் உண்டு என்றே சொல்லுவேன். அழுகையினால் திடீரென உடலுக்குத் தீமை ஏற்படாது. அழுகையிலுள்ள மனச் சஞ்சலத்தினால் உடல் நலம் சிறிது குன்றக் கூடும். கண்களிலிருந்து நீர் சொரிவதனால் கண்ணுக்குக் கேடுவராது. மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளைப் பெற்றார் நல்லாக அழவிடவேண்டும். கண்ணுக்கும் நல்லது; கண்டத்துக்கும் நல்லது.

நெஞ்சை யழுத்தும் துக்கத்தை வெளியிடமுடியாமல் தவிப்பவர்களுக்கு அழுகை ஒரு கைதேர்ந்த மருந்து. மனதார அழுதுவிட்டால் பாதித் துக்கம் தீர்ந்துவிடும்.

## வழக்கம் — பழக்கம்

தும்மல் வந்தாலும் இருமல வந்தாலும் கொட்டாவி விடுவதனாலும் வாயில் கைவைத்துக் கொள்வது நல்லது. கொட்டாவி விடும்போது இப்படிச் செய்வது வாய் நாற்றம் அருகிலிருப்போர்மேல் படாதிருக்கவே. தும்மல் இருமலின்போது இவற்றின்கிருமிகள் பரவாமல் தடுக்கும்.

வயதாக ஆகக் கிழவர்களின் உணவு ஐந்தாறு வயதுக் குழந்தைகள் சாப்பாடுபோல் ஆகிவிடவேண்டும். சிறுவயதில் சாப்பிட்டதுபோல் கனமாகச் சாப்பிடாமல் சிறிது சிறிதாகச் சத்துள்ள உணவைச் சாப்பிடுவதுதான் தக்கவழி.

தற்கால நகர வாழ்க்கையின் சாபத்தீடு இரைச்சல் பைத்தியம், கொலை தற்கொலை முதலியவைகள் இதனால்தான் தோன்றுகின்றனவென்று நிச்சயமாகச் சொல்லலாம். நரம்புத் தளர்ச்சி, அஜீரணம் முதலியவைகளும் இரைச்சலினால் உண்டாகின்றன.

## பட்சிகள் அரசியல் உணர்ச்சி!

ஆஸ்திரியாவிலிருந்து கவுதாரிப் பட்சிகள் சமீப காலம்வரை ஏராளமாகப் பிரான்சுக்குப் போவது வழக்கம். இந்த வருஷம் ஒரு கவுதாரியாவது செல்லவில்லை. ஆஸ்திரியாவை ஜெர்மனி விழுங்கிவிட்டதே இதற்குக் காரணம் என சிலர் வேடிக்கையாகப் பேசிக் கொள்ளுகிறார்கள். எப்படி இருந்தபோதினிலும் மனுஷர்களுக்கு இப்பேற்பட்ட உணர்ச்சி இன்னும் ஏற்படவில்லையே?

**ஈழகேசரி கல்வி அனுபந்தம்**
தனிப்பிரதி விலை சதம்—3
25 பிரதிகள் விலை சதம்—50
தபாற் செலவு வேறு
ஆண்டுச்சந்தா ரூபா 2.
முற்பணமின்றி அனுப்பப்படமாட்டாது

மண்ணான மாயையெல்லாம் மாண்டுவெளி யாகஇரு, கண்ணார வுங்கனவு கண்டேன் பராபரமே.

உல்லாச யாத்திரை — 3

# கண்கவர் கடற்கரைக் காட்சிகள்

'மூர்த்தி'

அனுராசபுரத்திலிருந்து புத்தளத்துக்குச் செல்லும் பாதை பெரிய மரக்காடுகளுக் கூடாகச் செல்கின்றது. விடியற் காலைநேரம்; புத்தளம் கடற்கரை சில்லென்றிருந்தது. இங்கு காணவேண்டிய ஸ்தலங்கள் இரண்டு. முஸ்லீம்களின் ஆலயம் ஒன்று; மற்றது புத்தளம் உப்பளம். இலங்கையிலுள்ள பள்ளிவாசல்கள் யாவற்றிலும் பெரியது இங்குள்ளதேயாம். கடற்கரையில் கட்டப் பட்டிருப்பது இதனழகை அதிகமாக எடுத்துக் காட்டுகின்றது. இங்குள்ளார் முஸ்லீம் மக்களென்பதை இவ்வாலயம் நன்கு புலப்படுத்துகின்றது.

தூரத்தில் நின்று பார்க்கும்பொழுது வடதுருவத்திலுள்ள பனிக்கட்டிப் பாறைகள் போன்ற தோற்றங் காணப்பட்டது. இவ்வெண் குன்றுகள் தான் புத்தளத்தின் செல்வமாகிய உப்புக் குவியல்கள். அந்த விடியற் காலமும், உப்புமேடுகளும், சுறுசுறுப்புடன் வேலை செய்து கொண்டிருந்த மக்களின் முயற்சியும் இப்பொழுதும் என்மனக் கண்முன் தோற்றுகின்றன. உப்பு விளையும் பாத்திகளின் அடிப்புறம் அழுத்தமாக இறுக்கப் பட்டிருக்கின்றது அப்பாத்திகளிற் கடல்நீர் மும்முறை கட்டி வற்ற விடப்படுகின்றது. உப்பு விளைந்தபின் தொழிலாளர் குப்பைவாரி போன்ற கருவிகளாற் கூட்டிச் சேர்க்கின்றனர். அப்படிச் சேர்க்கப்பட்ட உப்பு, பாத்திகளின் அயலிற் குவிக்கப் பட்டிருக்கின்றது. ஆயிரக் கணக்கான பாத்திகளில் உப்பு விளைந்து கொண்டிருக்கின்றது. உப்பை விட வேறேதாவது பொருள் இப்படி விளைவதென்றால்? ......... இது கைப்புத் தன்மையுள்ள உப்புத்தானே. இந்த உப்புக்குவியல்கள் பெரும் பந்தர்களுட் குவிக்கப் பட்டிருக்குங் காட்சி முகில்களால் மூடப்பட்ட வெள்ளிமலைகளெனத் தோற்றுகின்றன. புத்தளக்கடலில் ஒழித்திருந்த இந்த உப்புத்தான், இலங்கையில் அநேக நாடுகளிலுள்ள மக்கள் சமைக்கும் உணவுப் பொருள்களுள் மறைந்து கிடக்கின்றது. மழையைக் காணாது பயிரிடுவோர் எவ்வளவு மனக்கஷ்ட மடைகிறார்களோ, அவ்வளவு மனக்கஷ்டம் மழையைக் கண்டால் இங்குள்ளவர்க்கு ஏற்படுகின்றது.

மணல் வெளிகளும், தென்னஞ் சோலைகளும் நிறைந்த 36 மைல் தூரத்தைக் கடந்தால் 'சில்லோ'வை அடையலாம். ஆயின் இடையில் தெதுறு ஓயாவின்மேற் போடப்பட்டிருக்கும் பெரிய பாலமும் எங்களைக் கடந்துவிடும். தனித் தமிழ் அன்பர்களே! கோபித்துக் கொள்ளாதீர்கள்; எனது நண்பர்கள் அவ்விடத்தை ஆங்கிலத் தமிழில் "சில்லோ" "சில்லோ" என்று அழைத்ததைக் கேட்ட பழக்கம் என்னையும் இவ்வளவுதூரம் ஆங்கிலம்பேசச் செய்துவிட்டது. கடைத் தெருவிலிருந்து கடற் கரைக்குச் செல்லும் பாதையில் சலாபத்தின் சந்தையிருக்கின்றது. ஏராளமான மண்பாத்திரங்களும், காய் கறிப் பொருள்களும் இச்சந்தையை நிறைத்திருந்தன. அக்கரையிற் பொலீஸ் நிலையம், ஏனைய அரசினர் நிலையங்கள் ஆகியன அமைக்கப் பட்டிருக்கின்றன. இடையிலுள்ள சிறு கடலைக் கடப்பதற்கு அழகிய பாலம் அமைக்கப்பட்டிருக்கின்றது. நண்பகற் காலமாயிருந்தும், வெம்மையைத் தீர்த்து மந்தமாருதம் நல்கி இன்பமளித்த இக்கடற்கரைக்கு "மாலைக்காலத்தில் வரவில்லையே" என்று மனம் வருந்தினேன். புத்தளத்திலும் பார்க்கச் சலாபமே விசாலமான— விசேஷமான பட்டினமாகக் காணப்பட்டது. புத்தளத்தில் உள்ளவர் முஸ்லீம் சாதியினர். சலாபத்திலுள்ளவர் சிங்களவர். சலாபத்தின் சீருக்கேற்ப அங்குள்ள மக்களுந் தண்ணளியுடையோராகக் காணப்பட்டனர்.

கடற்கரையில் இருந்து 2 மைல் தூரத்திலிருக்கிறது பண்டைப் பெருமை வாய்ந்த முன்னீஸ்வரர் ஆலயம். சிங்களவரும், வெள்ளைக்காரருங் கூடத் தரிசனஞ் செய்துவிட்டுச் செல்கின்றனர். இதனுடைய பழைய சரித்திரங்களிற் சிலவற்றைக் கோவிற் பூசகர் ஒருவர்மூலம் அறிய நேர்ந்தது. பண்டைக் காலத்திலிருந்த பராக்கிரமபாகு அரசனே இதன் மகிமையைக் கண்டு பல திருப்பணிகளைச் செய்வித்ததுமன்றி அங்கு நடக்கும் பூசைகளுக்கு வேண்டிய திரவியங்களையும் கொடுத்துதவினானாம். போர்த்துக்கேயராற் தகர்க்கப் பட்டிருந்த இவ் வாலயத்தைக் கண்டிக் கடைசியரசன் இந்தியாவிலிருந்து வந்த சிற்பாசாரியர்களைக் கொண்டு அழகுற அமைப்பித்தானாம். ஒல்லாந்தரால் ஒளிக்கப்பட்டிருந்த இவ்வாலய விக்கிரகங்கள் பிற்காலத்திருந்த குமாரசுவாமிக் குருக்களால் கிண்டியெடுக்கப் பட்டுத் திரும்பவும் வைக்கப்பட்டனவாம்.

இவ்விடத்திலிருந்து 28 மைல் பிரயாணஞ் செய்தால் சிங்களச் சாதியும், தமிழ்ப்பாஷையும், கத்தோலிக்கமதமுடைய நூதனமக்கள் வாழும் நீர்கொழும்பையடையலாம். இப்பாதையின் மேல், வடமேல் மாகாணங்களின் எல்லையிலுள்ள மகாஓயாவைக் கடந்து செல்வோம். கொழும்பிலிருந்து புத்தளஞ் செல்வதற்கு ஒல்லாந்தரால் வெட்டுவிக்கப்பட்ட புத்தள வெட்டுவாய்க்கால் இடையிடையே தூர்ந்துபோய் உபயோகமற்றுக் கிடப்பதையும், மீன்பிடிகாரர் இவ்வாவிகளிற் சுறுசுறுப்புடன் தம் படகுகளிற் செல்வதையும் காணலாம். இறால் சாப்பிடுவதற்கென்றே சிலர் கொழும்பிலிருந்து இங்கு வருகிறார்களாம். அப்படியாயின் இங்குள்ள இறால்களின் சிறப்பைச் சொல்லவும் வேண்டுமோ? இங்கு டச்சுக்காரராற் கட்டுவிக்கப்பட்ட பழைய கோட்டையொன்றுங் கிடக்கிறது.

நீர்கொழும்பிலிருந்து கொழும்புக்குச் செல்லும் பாதையில் ஏராளமான புகையிலை, கறுவாத் தோட்டங்கள் காணப்படுகின்றன. 'லோ ஹானஸ் பேக்' என்னும் ஒல்லாந்த தேசாதிபதியால் ஆக்கப்பட்டுப் பண்டைப் பெருமையுடன் விளங்கும் குஷ்டரோக வைத்தியசாலை இப்பாதையிலேயே இருக்கின்றது.

(தொடரும்)

மண்ணீர்மை யாலே மயங்காதுன் கையாலென், கண்ணீர் துடைக்கவும்நான் கண்டேன் பராபரமே.

## எலியின் கதை

### மிருகக் காட்சிச்சாலை பார்வையிடல்

#### அத்தியாயம் 5

கன்ன மீசையனும் நானும் பல இடங்கட்குச் சென்றிருக்கிறோம். ஒருநாள் இரவு நானும் கன்னமீசையனும், மிகவும் நீண்ட தூரப்பிரயாணம் போகப் புறப்பட்டோம். நொண்டி எங்களுடன் வரவில்லை. வீட்டில் நிற்பதே யதற்கு மகாவிருப்பமாகவிருந்தது. அது வீட்டிலே நின்றால், குருட்டெலியையும் பாதுகாத்துக் கொள்ளும் என்று நினைத்து நாங்களும் நொண்டியைக் கூட்டிச் செல்லவில்லை. நாங்கள் பூமியின் உள்ளேயுள்ள பாதை வழியாகவே சென்றோம். அங்கே, அந்த இருட்டான இடத்தில் அநேகம் எலிகளைக் கண்டேன். கன்னமீசையன் எனக்குப் பக்கத்திலே யில்லாவிட்டால், நான் பயந்தே போயிருப்பேன். பூமியின் கீழ்ப்பாதையைக் கடந்து வெளியேறினதும்வெளிச்சமான இடத்தையும்,விருட்சங்களையும் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியுற்றேன். பூமியின்மேலுள்ள பசும் புல்லைக் கண்டு நான் உவகை பூத்தேன். "இந்தப் புற்றரை மாரிகாலத்தில் நல்ல அழகாயிருக்கும். பூனைகளும் இங்கே வந்து விளையாடுவன்" என்று கன்னமீசையன் சொன்னது. நான் முன் ஒருபோதும் பூனையைக் கண்டதில்லை யாதலால் அச்சொல்லைக் கேட்டதும் மிகவும் பயந்து திடுக்கிட்டுப் போனேன். "நண்பனே! என்னை வேறிடத்துக்குக் கொண்டுபோ. பூனைகளின் கண்களில் நான் அகப்படாமலிருப்பேன், என்றேன். ஒரு மனிதனுடைய தலையை யப்படியே விழுங்கக் கூடிய அவ்வளவு பெரிய வாயையுடையனவும், முன்னங்காலின் ஒரு அறையினால் ஒரு மனிதனை யப்படியே தரையிற் சாய்த்துவிடக்கூடியனவும் ஆகிய அத்துணைப் பெரிய பூனைகள் இருக்கும் இடத்துக்கு நான் உன்னைக் கூட்டிக்கொண்டு போகின்றேன்," என்றது கன்னமீசையன். "இந்தக் 'கன்னமீசையனோடு ஏன் வந்தேன்," என நான் என் மனத்துள் எண்ணலாயினேன் திரும்பி ஓடிவிட்டாலோ வென்று நினைத்தேன். கன்னமீசையன் எனது முகக்குறிகளால் எனது மனக்கருத்தை நன்கு அறிந்துகொண்டதுபோலத் தோற்றிற்று. "நீண்ட பிடர் மயிருள்ளனவும், புள்ளியுள்ளனவுமாய அப்பெரிய பூனைகள் எங்களைத் தொந்தரவு செய்யமாட்டா. ஏனெனில் அவைகள் இரும்புக் கூண்டுகளில் அடைக்கப்பட்டிருக்கின்றன," என்று கன்னமீசையன் சொன்னதும் எனக்குத் துணிவுண்டாய்விட்டது. "பூனைகள் பெரிதாயிருக்கட்டும். சிறிதாயிருக்கட்டும் அவற்றிற்கு நான் அஞ்சவில்லை. ஆனால் சுண்டெலிகள் இங்கேயுளவாயின், அவற்றை நீ எனக்குக் காண்பிக்கவேண்டும்," என்று நான் கன்னமீசையனிடம் கூறினேன். கன்னமீசையன் தனது மூக்கினாலே யொரு கட்டிடத்தைச் சுட்டிக்காட்டி) "அங்கே நீயவற்றைப் பார்க்கலாம். நான் குரங்குச் சாலைக்குச் செல்கிறேன் அங்கே நல்ல உணவு அகப்படும். கதவு பூட்டப்பட்டிருக்கிறது என்றாலும், காவற்காரனுக்குத் தொந்தரவு கொடுகாமல் நான் இரகசிய மார்க்கமாய் உட்செல்வேன்," என்று கூறிவிட்டு, மறைந்துவிட்டது. எனக்கும் பசிதான். ஆரோ சிறுவர்கள் கடித்தெறிந்துவிட்ட கடலையொன்றைக் கண்டு, அதைத் தின்றேன். பசிக்களை மாறியபின், சுண்டெலிகள் அடைக்கப்பட்டிருந்த கட்டிடத்துட் பிரவேசித்தேன். (தொடரும்)

---

வெளிவந்துவிட்டது!

வெளிவந்துவிட்டது!!

விசாகப்பெருமாளையரவர்கள் இயற்றிய

**யாப்பிலக்கணம்**

(திருந்திய பதிப்பு)

**விலை சதம் 35.**

**தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.**

---

## கல்விமுறை

(25-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடும். சென்னையில் S. S. C. பரீக்ஷைக்கு 25000 பிள்ளைகளுக்குக் குறையாமல் பிரவேசிக்கின்றனர். அப்பரீக்ஷையின் பெறுபேறு ஒன்றரை மாசத்தில் வெளியாகின்றது. இலங்கையில் சொற்ப பிள்ளைகள் எடுக்கும் எட்டாம் வகுப்புப் பரீக்ஷை முடிவு வெளிவருவதற்கு மூன்று மாசத்திற்குமேல் வேண்டியிருக்கின்றது. வித்தியா பகுதியார் வருடத்தைக் கட்டுப்படுத்துவதைப்போல் ஒவ்வொரு வித்தியாசாலையிலும் ஒரே அளவான தவணைகள் இருக்கவேண்டுமென்று கட்டுப்படுத்துவதும் நன்மையை விளைக்கும். சராசரி கணக்கிற்கு ஒரு வருஷமுடிவும் வருடாந்தப் பரீக்ஷைகளுக்கு இன்னொரு வருடமாக விருத்தலும் அதிக வேலையையும் சங்கடங்களையும் வருவிக்கக் கூடியதாகும். அவ்விஷயமும் திருத்த மடைய வேண்டிய தொன்றாகும்.

பரீக்ஷிக்கும் முறையி லேற்பட்டுள்ள திருத்தம் மிகப் பொருத்தமானது. இத்திருத்தத்தால் இனியாவது கல்வி விருத்தியடையுமென்று எண்ணக் கூடியதாக விருக்கின்றது. புதிய முறைப்படி வித்தியாதரிசிகள் முன் அறிவிப்பின்றி தாம் நினைத்த நேரஞ் சென்று பரீக்ஷிப்பார்கள். உபாத்தியாயர்கள் சோர்வின்றி எப்போதும் ஊக்கமாயிருப்பதற்கு இம்முறை உதவியாயிருக்கின்றது.

மேற்கூறிய திருத்தங்கள் மேற்குப் பகுதியிலும் வடபகுதியிலும் தான் இப்போது கையாளப் படுமாம். இலங்கை முழுவதிலும் கையாளப்பட்டாற்றான் இத்திருத்தங்களினால் பூரண நன்மையுண்டாகும்.

---

# இலங்கையில் வெண்வயிறுள்ள கடற் கழுகுகள்

'ச. ழு.'

புள்ளினங்களில் அதிக கனம் காத்திரம் உள்ளவைகளில் கழுகும் ஒன்றே. அதனிலும் இலங்கைக் கடற் கழுகுகள் அதிக பருப்பமும் பலமும் உள்ளன. இக்கழுகானது இலங்கையின் சிலபகுதிகளில் மாத்திரம் வருடத்திற்கு இரண்டொரு முறை காணலாம். பிரதானமாகக் கடற்கரையை யண்டிய நெருங்கிய மரக்கூடலிலே தான் காணலாம்.

இதன் சிறகுகள் வட்டமாக இருப்பினும் மிக நீளமும் அகலமும் உள்ளவைகளே. சிறகின் கீழ்ப்புறங்களில் மாத்திரம் இறகுகள் காணப்படும். இதன் வளைந்த மூக்கும் இறுகிய கால்களும் நீண்ட கொளுக்கி போன்ற வளைந்த நகங்களும் இரைதேடுவதற்கும் மற்றைய பூச்சி புழு பறவை முதலியவைகளைப் பற்றிப் புசிப்பதற்கும் பயன்படுகின்றன. காட்டுப் பட்சியாகத் தோற்றினும் மனசைக் கவரக்கூடிய ஒரு தனிச்சாயலையுடையது.

பெண்கழுகானது ஆணினும் பார்க்கப் பெரியதானது. பெண்பறவை அதிகமாக உரத்த சத்தம் செய்யும்; முக்கியமாக இரண்டும் ஒன்றுசேரும் பொழுதே. மாமிச பட்சணமே அதன் உணவு. ஏராளமாக மீன் தவக்கை கடற்பாம்பு நண்டு முதலானவைகளே அதன் உகந்த உணவாம். சிலசமயங்களில் கோழிக்குஞ்சும் இரையாகும்.

அவைகளை ஏரி வாவி சிற்ருறு உயர்ந்த மரச்செடி இவைபோன்றவைகளில் அதிகாலையிற் காணலாம். இரைச்சலோ புணருங் காலத்தில் ஈவு இன்றிக் காலை மாலை என்றபேதமில்லாமல் ஒரே சத்தமாகக் காதடைக்கச் செய்யும்.

மற்றைய பறவைகளைப்போல் அங்கும் இங்கும் கூடுகட்டமாட்டாது. வருடக் கணக்காகத் தன் சீவியகாலம் முழுவதும் ஒரே கூட்டிலேயே வாசம் செய்யும். ஆனல் அதே கூட்டை அதே இடத்தில் பிரித்துப் பெரியதாகக் கட்டும். சிலசமயங்களில் இரண்டு மனுஷர் படுத்துறங்கக் கூடிய நீள அகலத்தில் கூடுகட்டும். இதிலிருந்து அப்பட்சிகள் எவ்வளவு பெரியதென்று அறிந்து கொள்ளுங்கள்.

இந்தக்கூட்டின் ஒரு பக்கத்தில் பசிய இலைகள் குவிக்கப்பட்டிருக்கும். இலை குளைகளைக் கழுகு ஒருபோதும் உணவாகக் கொள்ளாது. பரப்பப்பட்ட இலைகளின் மேலும் கீழும் முட்டைகள் காணப்படும். இம்முட்டைகள் வான்கோழியினதிலும் பார்க்கப் பெரியதாகவும் வெண்மையாகவும் இருக்கும். முட்டைகளிலிருந்து கோழிக்குஞ்சுகள் போன்ற இரு வெண்ணிறக் குஞ்சுகள் நீண்ட மூக்குடனும் நகங்களுடனும் வெளிவரும். கீழ்மாகாணப் பகுதிகளில் அதிகமாகத் தன் கிளைகளுடனேயே காணப்படும்.

வெண்வயிறுள்ள இக்கழுகுகளுக்கு அதன் பிற்புறத்திலும் சிறகுகளிலும் சாம்பர் நிறம் உண்டு. ஆனல் தலை கழுத்து இன்னும் மற்றைய கீழ்ப்புறங்களும் வெண்மையாகத் தான் இருக்கும்.

முழுத் தோற்றமுடைய பட்சி சிலசமயங்களில் மனுஷனையும் குட்டிக் கலைக்க எத்தனிக்கும். அது வாசம் செய்யும் கூட்டை அணுகினல் எல்லாம் ஒன்றுசேர்ந்து தலையை உடைத்துவிடும். ஆகையால் அப்படிச் செய்ய எத்தனிப்பவர்களுக்கு ஒரு பாடம்.

# "நகைச்சுவைக்கல்வி"

"இல்லா நூலும் இலங்கிய கோலம்"

இக்காலங் கல்வி வளர்ச்சி பரிசீலனை செய்யப்படுவதுபோலிருந்த முந்திய நூற்றாண்டில், நாவற்காட்டிற் கலைக்கியானக் கல்லூரியொன்றில், நிரட்சரகுட்சியென்னும் பெயர்பூண்ட ஓர் ஆசிரியர் கல்வி புயிற்ற ஏற்பட்டனர். அன்னூர் கலைக்கியானம் எனுந்தொடர்மொழியைத் தானும் வரிவடிவில் மாணவர்க்குக் காட்டுஞ் சக்திக்குத் தூரமாயினர். ஆனல் வருடம் முழு நாட்களிலும் தவறாது ஆசிரியரும் மாணவரும் பாடசாலைக்குச் சமுகங் கொடுத்தது போற்றத்தக்கது. வருடாந்தப் பரீட்சைத் திகதியுந் துணையறிவிலியென்னும் வித்தியாதரிசியாற் றெரிவிக்கப்பட்டது. அப்போதே ஆசிரியர் வித்தியாதரிசி வரப்போகின்ருரே "யாது கற்பிப்பேன்" எனப் பதைபதைப்புடன் பாடசாலைக்குச் செல்லும் மார்க்கத்தில், தெய்வீகமாக அவர்க்கு ஓர் கலைக்கியானந் தென்பட்டது. வாசகர்களே! அவசரப்படாது ஆறுதலாகத் தெய்வீகக் கலையைப் பாருங்கள். ஆசிரியர், பாதையில் ஓர் பனந்தோப்பும் அதனயலிலோர் குளமுமுண்டு. அவர் பனந்தோப்புக்கூடாகச் செல்கையில், காய்வேலைகொண்டவோர் பனையிலுள்ள பழம் கம்!! என முகிழ் ஒடிந்து, சலார்!! எனக் காய்வோலையிற்றட்டி, டொம்!! என நிலத்தில் வீழ்ந்தது. உடனே மூன்று ஒலிக்குறிப்பையும் மனனபாடஞ் செய்தார். பனம்பழம் விழுந்த பேரொலி கேட்ட நாயொன்று வள்!! எனக் குரைத்தது. இவ்வொலி கேட்டுப் பக்கத்தில் மேய்ந்த ஆடு துள்ளியோடியது. ஆடு குளக்கரையைச் சமீபித்தவுடன் அவ்விடத்திருந்தவோர் கொக்கு மறுகரைக்குப் பறந்து சென்றது. அன்பர்களே! இவ்வளவோடு ஆசிரியர்க்கொரு சூத்திரம் பூர்த்தியானது. அச்சூத்திரத்தில் ஒலிக்குறிப்பால் வந்த பொருட்கள் இரண்டு. காட்சிப் பிரமாணத்தால் வந்த பொருட்கள் இரண்டு. ஆகவே சூத்திரத்தை இயற்றத் தொடங்கினர். சூத்திரம் பின்வருமாறு:—

"கம்!! சலார்!! டொம்!!
வள்!! வெள்ளாடோடக்
கொக் கக்கரைக்குப் போனது"

எல்லாம் நினதுசெயல் என்றெண்ணும் எண்ணமுமீ, அல்லால் எனக்குளதோ ஐயா பராபரமே.

# குணம்

நீராரும் கடலுடுத்த நிலமடந்தையில் உற்பத்தியான ஒவ்வொரு பூண்டுக்கும், புழுவுக்கும், ஜெந்துவுக்கும் ஒவ்வொரு குணமுண்டு. ஒரு மனிதனைப் பல மனிதர்களினின்றும் பிரித்துக்காட்டுவது குணமே. எல்லாரிடத்திலும் ஒரே குணமிருத்தலரிது. ஒவ்வொருவனுடைய சுவாபமே அவன் குணத்தைக் காட்டுகிறது. குணம் பெரியதேயன்றிக் குலம் பெரியதன்று என்று ஆன்றோர் கூறியுள்ளர். குலத்தால் யாதொரு நலமுமில்லை. எக்காரியத்திலும் வெற்றியடைவதற்கு, இன்றியமையாதது குணமே. பேரும், புகழும் அடைந்தவர்களின் ஜீவிய சரித்திரங்களைப் படிக்குங்கால், ஒவ்வொருவரும் வெவ்வேறு குணங்களையுடையவராயிருப்பதைப் பார்க்கலாம். அக்குணம் உண்மையுடைமை, மரியாதை நீதிதவறாமை, அன்புடைமை, விடாமுயற்சி முதலியவைகளில் ஒன்றாயிருக்கலாம். ஆனால், இவைகளில் ஒன்றில்லாமல் வெற்றியடைவதாவது, புகழ் பெறுவதாவது முடியாத காரியம். இவ்வாறாய நற்குணம் ஒருவரிடத்தில் அன்றி இருவரிடத்தில் மாத்திரம் இருக்க வேண்டியதல்ல. அஃது ஒவ்வொரு தேயத்தைச் சேர்ந்தவரிடமும் இருத்தல் வேண்டும். எத்தேசத்தினர் நற்குணங்களுடையவராய் மிளிர்கின்றனரோ, அவர்களே மற்றவர்களைக் காட்டிலும் சிறந்தவர்களாய் ஒளிர்கின்றனர். அதுவன்றி அவர் குணங்கள் கீழிறங்கத் தலைப்படுமாயின், அதனாலுண்டாகும் கெடுதலைப் படிப்பினாலும், மாறுபாட்டினாலும் நாகரீகத்தினாலும் தடுக்க முடியாது.

குணம் என்னவென்று நன்றாக விளக்க முடியாது. ஒருவனுடைய சுவாபமும், பழக்க வழக்கங்களுமே அவனுடைய குணங்கள். ஒருவன் முதலில் ஒரு காரியத்தைக் குறித்த நாட்களில் குறித்த நேரங்களிற் செய்வதற்கு ஆரம்பிக்கிறானென்று வைத்துக் கொள்வோம். அவன் இப்பொழுது அக்காரியத்தைச் செய்யப் பழகுகிறான். இன்னுஞ் சில நாட்கள் சென்றால் “பழக்கம் வழக்கம்” என்றபடி அதே அவனுடைய வழக்கமாகி விடுகிறது. இவ்வழக்கமே அவனுடைய குணத்தை உண்டாக்குகிறது. அக்குணமே அவனுக்கு இம்மையிற் புகழையும் மறுமையில் சுவர்க்கத்தையும் தருகிறது.

மக்களென்னும் உயர்திணைப் பெயருடைய யாம் மனதைத் தன்வயப்படுத்தி எழுகின்ற கோபத்தை யடக்கிக் கொள்ளும் நற்குணமுடையாராய் வாழ்தல் வேண்டும். இக்கருத்துப்பற்றியே. அறிவுடையோரும்

“உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க”

என்று கூறிப் போந்தனர். இழிவுள்ள நாய் ஒருவனைக் கடித்துவிட்டால் அவன் அதை மீண்டும் கடிக்கின்றானா? இல்லை. ஏன்? அதனிடத்துத் தனது உயர்வாகிய குணத்தைக் காட்டுதலினால். அதுபோல் கீழ்மக்கள் தம்மை வைதால், தாம் அவரை மீண்டும் வையாது பொறுத்துக் கொள்ளுதலே அறிவுடையோர் கடனாகும். ஒரு மரத்தை ஒருவன் வெட்டினால், அம்மரம் இறக்கும்வரை அவனுக்குக் குளிர்ச்சி பொருந்திய நிழலைக் கொடுத்து வெய்யிலை அவன்மேல் படவொட்டாமல் தடுப்பது அம்மரத்தின் பெருங் குணமன்றோ? ஆகையால் அன்பர்களே! இடுக்கண் நம்மை சூழினும் தளராது நற்குணமுடையாராய் என்றும் வாழ்வோமாக.

த. சா. யோகநாதன்,
(பழுகாமம்), மட்டக்களப்பு.

---

இதனை மறவாது நெட்டுருப்பண்ணிப் பாடசாலை சென்று தாமதியாது மாணவரை யழைத்து முன்னிருத்தி, அறுபத்தைந்தாங் கலைக்கியானத்து மூலசூத்திரம் இதுவெனப் பாடமோதிப் பரீட்சகர் வருநாளாகிய மறுதினத்தை ஆசிரியரும் மாணவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். அவர்கள் எண்ணம்போற் பரீட்சகர் வந்து, ஆசிரியரை நோக்கி, மாணவர் கலைக்கியானத்தில் எத்தனை கற்றிருக்கின்றாரென உசாவினர். ஆசிரியர் சிறிதுங் கோணாது அறுபத்தைந்தாங் கலைக்கியானத்து மூலசூத்திரமும் படித்துவிட்டனர் என்றார். பரீட்சகர் அச் சூத்திரத்தையே கேட்க, மாணவர் யாரும் திக்குமுக்குப்படாது

“கம்!! சலார்!! டொம்!!
வன்!! வெள்ளாடோடக்
கொக் கக்கரைக்குப் போனது”

என்றனர். உடனே பரீட்சகர் அச் சூத்திரத்துக்கு வியாக்கியானஞ் செய்யும்படி கேட்க, ஆசிரியர் பரபரப்புடன் தொடர்புறக் கூறினர். அதனால் ஆசிரியருக்கு முந்திய சம்பளத்திலும் மாதவிதம் பத்துரூபா கூடப் பெறும்படியாக வித்தியாதரிசியவர்கள் சிபார்சு செய்தனர். அன்பர்களே! நகைச்சுவையூட்ட இதை வரைந்தேனன்றி வேறு நோக்கமில்லை. மன்னிக்குக.

ம. தம்பிப்பிள்ளை
S. S. C. மாணவன்
சரவணபவானந்த வித்தியாசாலை, கோப்பாய்.

---


## கல்வி அனுபந்தம்

(சொற்ப பிரதிகளே கைவசம் இருக்கின்றன.)

சென்றவருட ‘ஈழகேசரி கல்வி அனுபந்த’ப் பிரதிகள் முழுவதும் சேர்த்துப் புத்தக ரூபமாக கட்டப்பெற்றிருக்கின்றது.

விலை ரூபா 2-00
தபாற்செலவு 35

‘ஈழகேசரி’ நிலையம், சுன்னாகம்

# ஈழகேசரி இளைஞர்சங்கம்

குழந்தைகளே!

கழிந்த வாரக்கடிதத்தை வாசித்ததும் ‘ உங்களில் அனேகர் என்னை ஒரு அபூர்வமான பொய்யன் என்று எண்ணியிருப்பீர்கள். நான் அனுப்பிய கடிதம் ‘ஈழகேசரி’ நிலையதிற்குச்செல்லு முன்னராகவே காலநிலையைப்பற்றி எழுதிய ஒவ்வொன்றிற்கும் நேர்மாருக இயற்கைத்தாய் நடந்து கொண்டாள். அவையெல்லாம் என் குற்றம் அல்ல.

யாழ்ப்பாணத்தில் ‘எப்பாகத்திலும் நல்ல மழை யென்று அறிந்தேன். அதன் பலனுக வாடிச்சோர்ந்த பயிர் „பச்சையெல்லாம் ஒரு தனி உற்சாகத்துடன் பார்ப் போர் கண்களுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கின்றன. ஏங்கிப்பதுங்கியிருந்த கமக்காரர்கள் எல்லோரும் புல் பூண்டுகளிலும் பார்க்க அதிகசந்தோஷம் கொண்ட நிலையில் ஒருகாலுக்கு இரண்டு மூன்று தரமாவது தோட்டங் களுக்காவது வயல்களுக்காவது சென்று தங்கள் கண்களுக்கு விருந்துபோடாதவர் ஒருவரில்லை. பருவகாலத்து மழையைப்போல் சிறந்த வனப்பையும் பலனையும் கொடுப்பது வேருென்றில்லை யென்று திடமாகக்கூறலாம். மழைக்கும் அரசனுக்கும் உள்ள நெருங்கிய தொடர்ச்சியைப்பாருங்கள். அரசனுய் இருப்பினும் நீர்வளம் குறையுமாயின் இராசதானியும் கெடும். நீர் உயர்ந்தால் கோன் உயரும் என்ற பொருளைக்கொண்டு பெரியாரும்,

“வரப்புயர நீர் ‘உயரும்
நீர் உயர ‘நெல் உயரும்
நெல் உயரக்குடி உயரும்
குடி உயரக் கோன் உயரும்” என்ருர்.

இதன் உண்மை எவ்வளவு தெளிவாகவிருக்கிறதென்று பார்த்தீர்களா?

பிள்ளைகளே! சில சமயங்களில் உங்களை நினைக்கும் போதெல்லாம் என்வயிறு பற்றி எரிகின்றது. ஏன் என்று கேட்கவேண்டாம். உங்கள் பிற்கால சீவியத்தை எப்படிக் கழிப்பீர்கள் என்னுந்துக்கந்தான் அதிககவலையைக்கொடுக்கிறது. உங்களைக்கலங்கவைப்பதில் எனக்கு ஒரு மகிழ்ச்சியுமில்லை. வயது ஏற ஏற எல்லோருக்கும் புத்தி கூர்மையடைகிறது. என்னைப்போன்ற வயோதிபர்களுக்கு கூர்மை குறைகிறது. ஆனுல் உங்களைப்போன்ற சிலருக்கு மந்தமடைகிறது.“ அவர்கள் யார் யாரென்று வெளிப்படையாகக்கூற எனக்கு விருப்பமில்லை. இதை வாசிக்கும் பொழுதே அத்தன்மையுடையவர்கள் தங்களைத்தாமே என் உதவி இல்லாமலும் நன்கு அறிவர். உங்களில் எத்தனைபேர் கிரமமாகத் ‘தாத்தா பாட்டிக்கு’ சுக துக்கம் அறிவிக்கிறீர்கள்? எத்தனைபேர் கேட்டகேள்விகளுக்கு மறுமொழியனுப்புகிறீகள். உங்களில் யார் தாய் தந்தையர்கள் மனம் குளிரக்கூடிய விதமாக நடக்கும் தன்மை உள்ளவர்கள்? ஒருசெய்கையிலிருந்து பலதையும் யூகித்து அறியும் தன்மை எனக்கு உண்டு. நான் எழுதுவதெல்லாம் சிலருக்கு வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் இருக்கக்கூடும்.. “காவோலை விழக் குருத்தோலை சிரிப்பதும்” உண்மை. இதன் உண்மை இன்னும் சிலகாலங்களில் நன்கு புலப்படும்.

சென்ற வாரத்தில் ஏதோ தெரிவிப்பேனென்று எழுதினேனல்லவா? கவனியுங்கள்.

உங்களில் எத்தனை பேர் சிறு கதை எழுதுவதில் சமர்த்தர்களாயிருக்கிறீகள்? பலவாரங்களில் கல்வி அனுபந்தத்தில் வெளி வந்த கதைகளில் உங்கள் திறமைகளைக்காட்டித்தானிருக்கிறீர்கள். ஆனுல் உங்கள் ‘கைச்சரக்கு’ இன்னும் பத்திரமாக உங்களோடுதான் வைக்கப்பட்டிருக்கிறது என்பது எனக்குத் தெரிகிறது. ஆகையால், சிறுகதை யெழுதுபவர்களில் திறமையுள்ளவர்களுக்குக் காலத்துக்குக்காலம் நான் ஒரு அழகிய பரிசு கொடுக்கத் தீர்மானித்திருக்கிறேன். எங்கே பார்க்கலாம் உங்கள் திறமையை! சிறு கதைப்போட்டியின் நிபந்தனைகளைக் கவனியுங்கள்.

1. ‘ஈழகேசரி’ இளைஞர் சங்கத்திலுள்ளவர்களே இப்போட்டியிற் கலந்து கொள்ளலாம்.
2. சிறு கதைகள் ஒவ்வொன்றும் ‘ பூல்ஸ்காப் ’ கடதாசியில் மூன்று பக்கத்துக்கு மேற்படலாகாது.
3. கடதாசியின் ஒருபுறத்தில் மாத்திரம் எழுதப்படவேண்டும்
4. கதைகள் சொந்தக்கற்பனையாக இருக்க வேண்டும்.
5. நவம்பர் மாதம் 15ம் திகதி செவ்வாய்க்கிழமை மத்தியானத்துக்கு முன் கதைகள் ‘ஈழகேசரி’க் காரியாலயத்தைச்சேர வேண்டும்.
6. கதைகள் அனுப்பும் கவர் மீது இடது புற மூலையில் “சிறுவர் சிறுகதைப் போட்டி” என்று குறிப்பிட்டு அதன் கீழ் அங்கத்தவர் சந்தா எண்ணையும் குறிப்பிட வேண்டும்.
7. ‘தாத்தா’வின் தீர்ப்பே முடிவானது. எதிர் வாக்குக்கிடையாது! ‘ஈழகேசரி’ நவம்பர் 20ம் திகதி கல்வி அனுபந்தத்தில் பரிசு பெற்றவர் பெயரும் கதையும் வெளியிடப்படும். பரிசும் அன்றே அனுப்பப்படும்.

—தாத்தா.

ஆங்கில J. S. C, S. S. C. வகுப்புக்குரிய
**தமிழ் இலக்கியபாட புத்தகங்கள்**

| | |
|---|---|
| நளவெண்பா கலிதொடர் காண்டம் முதல் 100 செய்யுள் - உரையுடன் | 60 சதம் |
| இராமாயணம் – பாலகாண்டம் அகலிகைப்படலம் உரையுடன் | 60 சதம் |

**தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம்.**
ஏனைய புத்தக வியாபாரிகளிடமும்
பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு “திருமகள்நிலைய” த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னுகம் ‘தலையாழ்டி’ யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1938-ம் ௵ நவம்பர் ௴ 6௳ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது